நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No. 104/2020**

**P.W. 10 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | பிரசாத் |
| தந்தை / கணவர் பெயர் | : | முத்து |
| கிராமம் | : | மேட்டுர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 10** |
| வயது | : | 39 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2025–ஆம் வருடம், ஜுலை மாதம், 09–ம்ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர் அவர்களது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.02 PM)

1. நான் தற்போது மேட்டூர் அரசு தலைமை மருத்துவமனையில் முதுநிலை உதவி மருத்துவராக பணி புரிந்து வருகிறேன். நான் 03.11.2019 அன்று பணியில் இருந்தபோது மாலை 7.00 மணி அளவில் தங்கராஜ் த/பெ ராமசாமி என்பவரை சிவராஜ் என்பவர் அழைத்து வந்தார்.

2. காயம் பட்ட நபர் சுய நினைவுடன் இருந்தார்.அவரை நான் விசாரித்தபோது அவர் தன்னை நான்கு அடையாளம் தெரிந்த ஆண் நபர்கள் மற்றும் ஒரு அடையாளம் தெரிந்த பெண் நபர் 03.11.2019 மாலை 6.30 மணி அளவில் அவரது வீட்டில் கத்தியால் தாக்கியதாக கூறினார்.

3. அவரை நான் பரிசோதித்தில் கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது.

4X 1 செ.மீ அளவுடைய கிழிந்த காயம் எலும்பின் ஆழம் வரை கபாலத்தில் இருந்தது.

1 X 1 செ.மீ அளவுடைய கிழிந்த காயம் இடது நெற்றி புருவத்தில் இருந்தது.

2 X 2 செ.மீ அளவுடைய கண்ணிய காயம் மற்றும் 0.5x 0.5 செ.மீ அளவுடைய கிழிந்த காயம் மூக்கில் இருந்தது.

4 X 2 செ.மீ சிராய்ப்பு காயம் இடது பக்க கழுத்தில் இருந்தது.

அவருக்கு அனைத்து முதல் உதவிகளும் முடிந்த பிறகு சேலம் அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக பரிந்துரை செய்தேன். காயம் பட்ட நபர் சேலம் அரசு மருத்துவனையில் சிசிக்சை எடுத்து கொண்டார்.அதன் அடிப்படையில் கருத்துரை சேலம் அரசு

மருத்துவனை வழங்கப்பட்டது. அந்த கருத்துரையின் அடிப்படையில் நான் கொடுங்காயம் என்று சான்று அளித்தேன். ( **மேட்டூர் அரசு மருத்துவனையில் தங்கராசுக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டு நகல் அ.சா.ஆ 6 மற்றும் காயச் சான்றிதழ் 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

4. **நீதிமன்ற கேள்வி: நீங்கள் சொன்ன நான்கு காயங்களில் எந்த காயம் கொடுங்காயம் என்று உங்களால் சொல்ல முடியுமா? பதில்: என்னால் மேற்படி காயங்களில் எந்த காயம் கொடுங்காயம் என்று சொல்ல முடியாது. சிகிச்சை அளித்த மருத்துவர் தான் பரிசோதனை அறிக்கைகளின் அடிப்படையில் குறிப்பாக எந்த காயம் கொடுங்காயம் என்று சொல்ல இயலும்.**

4. அன்றைய தினமான 03.11.2019ம் தேதி மாலை 7.15 மணி அளவில் மணிவண்ணன் த/பெ ராமசாமி என்பவரை அவரது உறவினர் சிவராஜ் என்பவர் அழைத்து வந்தார். அவர் சுய நினைவுடன் இருந்தார். அவரை நான்கு அடையாளம் தெரிந்த ஆண் நபர்கள் மற்றும் ஒரு அடையாளம் தெரிந்த பெண் நபர் 03.11.2019 ல் மாலை 6.30 மணி அளவில் அவரது வீட்டில் கத்தி மற்றும் கல்லால் தாக்கியதாக கூறினார்.

5. அவரை பரிசோதித்த போது கீழ்கண்ட காயங்கள் இருந்தது.

அவருக்கு 2X 2 செ.மீ அளவுடைய கிழிந்த காயம் தலையின் வலது பக்கம் எலும்பின் ஆழம் வரை இருந்தது.

5.அனைத்து முதல் உதவிகளும் முடிந்த பிறகு சேலம் அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக பரிந்துரை செய்தேன்.

காயம் பட்ட நபர் சேலம் அரசு மருத்துவனையில் சிசிக்சை எடுத்து கொண்டார்.அதன் அடிப்படையில் கருத்துரை சேலம் அரசு மருத்துவனை வழங்கப்பட்டது. அந்த கருத்துரையின் அடிப்படையில் நான் சாதாரண காயம் என்று சான்று அளித்தேன். ( **மேட்டுர் அரசு மருத்துவனையில் மணிவண்ணனுக்கு வழங்ககப்பபட்ட விபத்து பதிவேட்டு நகல் அ.சா.ஆ 8 மற்றும் காயச் சான்றிதழ் 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) ( சேலம் அரசு மருத்துவமனையில் மணிவண்ணனுக்கு வழங்ககப்பபட்ட விபத்து பதிவேட்டு நகல் அ.சா.ஆ 10 மற்றும் கருத்துரை 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) போலீசார் என்னை விசாரித்தனர்.**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

1. அ.சா1 தங்கராஜ் என்பவர் மருத்துவமனையில் சிகிச்சையில் சேரும்போது நான்கு ஆண் நபர்களும், ஒரு பெண் நபரும் கத்தியால் தாக்கியதாகத்தான் என்னிடம் சொன்னார் என்றால் சரிதான். கல்லால் தாக்கியதாக எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி தங்கராஜ் என்பவருக்கு ஏற்பட்டதாக நான் சொன்ன காயங்கள் ஒரு உயரமான பகுதியில் இருந்து தவறி விழும்போதும் ஒரு இருசக்கரவாகனத்தில் இருந்து விழும்போதும் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.

2. தங்கராஜ் என்பவருக்கு எக்ஸ்ரே மற்றும் ஸ்கேன் எடுத்தார்களா என்றால் இல்லை. தங்கராசுக்கு வழங்கபட்ட காயச்சான்றிதழில் எந்த காயம் கொடுங்காயம் எந்த காயம் சாதாரண காயம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. அ.சா2 மணிவண்ணன் என்பவர் மருத்துவனையில் சேரும்போது தன்னை நான்கு ஆண் நபர்களும் ஒரு பெண் நபரும் கத்தி மற்றும் கல்லால் தாக்கியதாக சொல்லி மருத்துவமனையில் சேர்ந்தார் என்றால் சரிதான். மேற்படி மணிவண்ணன் தன்னை தேக்சாவால் தாக்கியதாக எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

4. அ.சா2 மணிவண்ணனுக்கு ஏற்பட்ட காயமும் உயரமான பகுதியில் இருந்து கிழே விழுந்தாலும் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேட்டு அறிக்கை மோகன்ராஜ் த/பெ சேகர் என்பவருக்கு நான் கொடுத்தது தான். ( **அந்த விபத்து பதிவேட்டு அறிக்கை எ.சா. ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

5. மேற்படி எ.சா.ஆ 1 ஆவணத்தில் 03.11.2019 அன்று மாலை 6.30 மணிக்கு காவேரி கிராஸ் பொங்கியண்ணன் நகரில் மூன்று ஆண் நபர்கள் கத்தியால் தாக்கியதாக சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கபட்டார் என்றால் சரிதான். அதே தேதியில் அதே நேரத்தில் மூன்று ஆண் நபர்கள் கத்தியால் வெட்டியதாக ரமேஷ் த/பெ சேகர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேட்டு அறிக்கை மேற்படி ரமேஷ் என்பவருக்கானது என்றால் சரிதான். (**அந்த விபத்து பதிவேட்டுஅறிக்கை எ.சா ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:—12.46PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**